Book Post

Southern Builder

ESTD 1941

Bulletin of the Builders' Association of India – Southern Centre

Plot No.A1, 1st Main Road, (Near Indian Bank), Industrial Estate, Ambattur, Chennai-600058
Mobile: 8754598668 | Email: baisouthern1950@gmail com

For Private Circulation Only.

AUGUST 2026



13.08.2026 அன்று

PRESENCE LESS REGISTRATION

பற்றிய விழிப்புணர்வு பயிற்சி கூட்டம் நடைபெற்றது.

Jayaraj

Leaders in Teak



T. RAJA SEKHAR
MANAGING DIRECTOR

JAYARAJ-TIMBER

Teak Wood Logs | Teak Sizes | Teak Planks
Teak Frames | Doors & Windows



Our company has 30+ years of expertise in Teakwood, importing from around **10 countries** across the World. We operate from **Chennai offering excellent quality**, **pest-free Teakwood** at **competitive prices** to our customers. We supply **PAN India** to **Builders, Furniture Manufacturers, Saw millers, Traders, etc.**

PHONE
9840070992 | 9791067555 | 7092212666

ADDRESS
19, Puzhal Union Road, Vadaperumbakkam,
Chennai-600060

WEBSITE
www.jayarajtimber.com

EMAIL
enquiry@jayarajtimber.com











Southern Builder

Bulletin of Builders' Association of India - Southern Centre

For Private Circulation only

Offical Journal of Builders' Association of India - Southern Centre. August 2026

Builders' Association of India
Southern Centre
Plot No. A1, 1st Main Road, Opp. to AIEMA, Industrial Estate, Ambattur, Chennai - 600 058.
(T) 044-2625 2006 | (E) baisouthern1950@gmail.com | (W) www.baisouthern.com

OFFICE BEARERS - 2026-2027

MR. K GOPINATHAN	- CHAIRMAN
MR. G DIWAKAR	- VICE CHAIRMAN
MR. A SATHYANARAYANA	- HON. SECRETARY
MR. J NIMAL CHAND	- HON. TREASURER
Mr. K. YUVARAJ	- HON. JOINT SECRETARY
MR. R NIMRODE	- IMM. PAST CHAIRMAN

EDITOR

MR. Mu. MOAHAN
94444 48989

EDITORIAL BOARD

MR. S D KANNAN
MR. S RAMAPRABHU
MR. R NIMRODE

ADVISORS

Bhisma R RADHAKRISHNAN
All India Past President & Trustee

MR. J.R. SETHURAMALINGAM
All India Past Trustee

CONTENTS

ஆசிரியர் மடல்	04
மய்யத்தலைவர் மடல்	05
Tax Corner- Goods And Services Tax Network (A Government Enterprise)	06
கட்டிடக்கலையும் நாகரிகமும்	09
New Patron Members	13
விபத்துக்களுக்கு விடை கொடுக்கும் தொப்பூர் கணவாய்	14
Real Estate Update	22
Photo Page	24
மெட்ராஸ் தினம்	47
Southern Centre Activities	48

TARIFF

Si. No.	Advertisement Position	Quarterly	Half Yearly	Annual
1.	Multicolour A4 size Back Cover	N/A	N/A	Rs.4,00,000/-
2.	Multicolour A4 size Back Cover Inner Page	N/A	N/A	Rs.2,50,000/-
3.	Multicolour A4 size Front Cover Inner Page	N/A	N/A	Rs.3,00,000/-
4.	Multicolour A4 size Inner Full Page	Rs.60,000/-	Rs.1,00,000/-	Rs.1,80,000/-
5.	Multicolour A4 size Inner Half Page	Rs.30,000/-	Rs.55,000/-	Rs.1,00,000/-
6.	Multicolour A4 size-Inner Quarter Page	Rs.17,500/-	Rs.30,000/-	Rs.50,000/-

Disclaimer
The Materials Provided in this Publication are a free Service to its readers. No copyright Violations are intended. Views expressed in this publication are not necessarily of BAI. No direct or indirect or consequential liabilities are acceptable on the information made available herein.

ஆசிரியர் மடல்



அன்புடையீர் வணக்கம்,

கடந்த ஆகஸ்ட் 26ந் தேதி காலையில் இமயமலை தொடரில் திபெத் பகுதியில் ஏற்பட்ட பனிப்பாறை வெடிப்பானது கிட்டத்தட்ட 2000 அடி அகலத்திற்கு பனிச்சரிவு ஏற்பட்டு கீழே பள்ளத்தாக்கு பகுதிக்கு பாறைகளுடன் விழுந்தது. இதனால் லெண்டே கோலா ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு 70 அடி உயரத்திற்கு வெள்ளம் பெரும் சுனாமி போல உயர்ந்து நேபாள நாட்டில் பாய்ந்தது.

160 கி.மீ வேகத்தில் பாய்ந்த வெள்ளம் பாலங்கள், சாலைகள், கட்டிடங்களை உடைத்துக் கொண்டு சென்ற வெள்ளத்தில் பலவேறு நாடுகளில் இருந்து வந்த சுமார் 1300 பேர் உயிரிழந்து விட்டதாக நேபாள அரசு தகவல் தெரிவிக்கிறது. மேலும் 4000 பேர் காணவில்லை. நேபாள அரசு காணாமல் போனவர்களை தேடியும், நிவாரண பணிகளையும் மிகவும் தீவிரமாக செயல்படுத்தி வருகிறது. இந்திய அரசும், சீனாவும் நிவாரண உதவிகளை செய்து வருகிறது.

இந்த பேரிடருக்கான காரணம் பசுமை சூழல் மாறுபாட்டால் புவி வெப்பமடைந்து பணிப் பாறைகள் உருகியதே காரணம் என்று கூறிய நேபாள அரசு, இந்திய, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் இதைத் தடுக்க முனைய வேண்டும் என்று கோரியிருக்கிறது.

இந்த ஆண்டு பசிபிக் பெருங்கடலில் ஏற்பட்டுள்ள எல்நினோ மாற்றம் மிகப் பெரிய தாக்கத்தை உண்டாக்கும். இதனால் இந்தியாவுக்கு பாதிப்பு ஏற்படும் என்று அறிவிப்பாளர்கள் எச்சரித்துள்ளனர்.

பசுமை சூழல் மாறுபாடு மற்றும் புவி வெப்பமாதம் என்பது இயற்கை நமக்கு விடுத்திருக்கும் எச்சரிக்கை. நாம் வரும் சந்ததியினருக்காக நல்ல வளமான இயற்கை சூழ்நிலையில் பூமியை மாசுபடுத்தாமல் இருக்க வேண்டும்.

நேபாள பெரு வெள்ளத்தல் உயிரிழந்தவர்களுக்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி, வணக்கம்
என்றும் அன்புடன்
Mu. மோகன்

மய்யத்தலைவர் மடல்



தென்னக மய்ய உறுப்பினர்களுக்கு வணக்கம் !

புதுக்கோட்டையில் 02.08.2026 அன்று நடைபெற்ற இரண்டாவது மாநில அளவிலான கூட்டத்திற்கு நமது மய்யத்திலிருந்து 25க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நமது மய்யம் அறக்கட்டளையுடன் இணைந்து ITI மாணவர்களுக்கு நடத்திய இலவச திறன் மேம்பாட்டு பயிற்சியை முடித்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா 04.08.2026 அன்று மய்ய வளாக கூட்ட அரங்கில் நடத்தப்பட்டு சிறப்பாக தேர்ச்சி பெற்ற 5 மாணவர்களுக்கு சிறப்புப்பரிசும், அனைவருக்கும் சான்றிதழோடு பரிசுப் பொருளும் வழங்கப்பட்டது.

நவீன்ஸ் நிறுவனத்தின் பணியிடமான மேடவாக்கத்தில் அறக்கட்டளையோடு இணைந்து 11.08.2026 அன்று கட்டுமான தொழிலாளர்களுக்கான மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் அனைத்து வகை பரிசோதனைகளும் தொழிலாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்டு தேவையானவர்களுக்கு இலவச மருந்துகளும் வழங்கப்பட்டது.

Presence Less Registration குறித்த விழிப்புணர்வு பயிற்சி கூட்டம் IG Registration அதிகாரிகளால் 13.08.2026 அன்று நமது மய்ய அலுவலக வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் 170க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

Ambatur Avadi Flat Promoters Association ல் CMDA/DTCP தொடர்பான சமீபத்திய விதிமுறைகள் பற்றிய கூட்டத்தில் தான் கலந்து கொண்டேன்.

மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட இந்தியாவின் நான்காவது பெரிய நகரமான சென்னை தன்னுடைய 387வது பிறந்த நாளை கொண்டாடியது. அப்போதைய மெட்ராஸ் இப்போதைய சென்னை என்று அழைக்கப்படும் நகரத்தின் பிறப்பை நினைவு கூறும் வகையில் ஆகஸ்ட் 22ந் தேதி மெட்ராஸ் தினமாக கொண்டாடப்பட்டது.

நேபாளத்தில் ஏற்பட்ட இயற்கை பேரிடரில் உயிரிழந்த மக்களுக்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மய்யத்தின் நிரந்தர எண்ணிக்கையை கனிசமான அளவிற்கு உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உறுப்பினர்கள் அனைவரும் நமது சதர்ன் பில்டர் மாத இதழ் வெளியிட விளரம்பரங்கள் பெற்று தருமாறு அன்போடு வேண்டுகிறேன்.

என்றும் அன்புடன்,

K. கோபிநாதன்
மய்யத்தலைவர்

GOODS AND SERVICES TAX NETWORK (A Government Enterprise)

திரு. S.D. கண்ணன்
Taxation Committee



FAQs on Voluntary Closure of e-Way Bill: Business Scenarios, API Impact and Portal Behaviour

(FAQs for stakeholder guidance and system readiness)Date: 01.07.2026

1. SCOPE AND IMPLEMENTATION

The revised date of implementation is 1st August, 2026.

Q1. What is the Voluntary e-Way Bill Closure facility?

The Voluntary e-Way Bill Closure facility enables closure of an e-Way Bill after delivery of goods has been completed. It is intended to record completion of movement in the system.

Q2. Is closure of EWB mandatory?

No. Closure of EWB is voluntary in nature.

Q3. What is the revised implementation date?

Q4. When can an EWB be closed?

An E-Way Bill may be closed after completion of delivery of goods. It is advised that such closure should be carried out on the date of delivery or on the immediately succeeding day.

However, the closure functionality shall remain available up to one day after the expiry o validity of the E-Way Bill. The date of closure, i.e. the date of receipt/delivery of goods, shouldfall between the date of generation and the date of expiry of the E-Way Bill.

For example, where an E-Way Bill is generated on 20.06.2026 and its validity expires on30.06.2026, the date of closure may be any date between 20.06.2026 and 30.06.2026,depending upon the actual date of receipt of goods. If the goods are received on 25.06.2026,the E-Way Bill may be closed from 25.06.2026 up to 01.07.2026, i.e. one day after the expiry of validity.

Q5. Who can close an EWB?

An EWB may be closed by the supplier, recipient, transporter involved in the transaction, or driver/ authorised person whose mobile number has been provided for closure.

2. PORTAL-BASED CLOSURE

Q6. Where is the closure option available for supplier, recipient and transporter?

For suppliers, recipients and transporters, the closure option is available after login under thee-Way Bill section of the portal.

Q7. What are the portal modes for closure?

Closure can be performed EWB-wise or date-wise for logged-in users.

Q8. What is EWB-wise closure?

EWB-wise closure means that a specific e-Way Bill number is selected and closed after delivery is completed.

Q9. What is date-wise closure?

Date-wise closure allows the logged-in user to view EWBs for a particular date and close eligible EWBs after delivery.

Q10. Can multiple EWBs be closed through date-wise closure on the portal?

Yes, the option is available.

Q11. Can a driver or authorised person close an EWB?

Yes. A driver or authorised person can close an EWB through the portal-based mobile number closure facility, where the mobile number has been provided for closure purposes.

Q12. How does mobile number-based closure work?

All active EWBs linked to the concerned mobile number are displayed under the Search option on the EWB Common Portal, enabling closure by the authorised person after delivery.

Q13. Is mobile number entry mandatory?

No. Providing the mobile number is optional. However, if closure by driver or authorized person is intended, the relevant mobile number should be provided.

Q14. When can the mobile number be provided or updated?

The mobile number may be provided at the time of EWB generation. If required, it can also be updated during vehicle updation, consolidated EWB operations or extension of validity,wherever applicable in the system.

3. EWB API IMPACT

Q15. Is an API available for EWB closure?

Yes. An API has been provided for system integrators and API users for closure of EWBs.

Q16. What details are required for closure through API?

For closure through API, the EWB number, closure date and remarks are required to be transmitted.

Q17. Does the closure API support date-wise bulk closure?

No, the current API does not support date-wise bulk closure.

Q18. Is there any API to retrieve EWBs marked as closed, including date-wise retrieval?

No. Currently, no separate API has been introduced to retrieve EWBs that have been marked as closed, including date-wise retrieval of closed EWBs. Such functionality may be consideredin future after the closure module is stabilised and based on operational requirements emerging from field usage.

Q19. Will Get EWB Details API show a separate Closed status or closed date?

At present, no separate provision has been introduced in the Get EWB Details API to return a Closed status or Closed Date. For the initial stabilisation period, the existing status frameworkis being continued. A separate status of “Closed” is proposed to be introduced in due course.

Q20. Can APIs capture the mobile number for closure by driver or authorized person?

No. At present, there is no provision in the APIs to capture or specify the mobile number for closure by driver or authorised person.

Q21. Can a driver or authorised person close EWB through API?

No. As per the current implementation, closure by driver or authorised person through mobile number-based access can be carried out only through the portal.

Q22. What is the character limit for closure remarks?

Closure remarks may be entered up to a maximum of 100 characters.

Q23. Does any API response indicate who closed the EWB?

As of now, the API response does not contain any field indicating the person who closed thee-Way Bill(EWB).

4. STATUS AND POST-CLOSURE BEHAVIOUR

Q24. Will a separate status of "Closed" be introduced?

Yes. A separate status of "Closed" is proposed to be introduced in due course for EWBs that have been marked as closed after completion of delivery.

Q25. What is the current EWB status framework?

Currently, the EWB status is reflected as Active, Cancelled or Discarded. For the initial stabilisation period, this existing status framework is being continued so that trade and system users are not adversely impacted during the transition phase.

Q26. If an EWB is marked as closed, will it immediately show as "Closed"?

During the initial stabilisation period, a separate "Closed" status may not be reflected in the existing status framework. However, closure details will be captured in the system.

Q27. Can user actions be performed after an EWB is marked as closed?

Yes. As of now, user actions such as Update Transporter, Extend Validity, Vehicle Updation and other permitted modifications will continue to remain available even after the EWB has been marked as closed.

Q28. Why are post-closure actions allowed initially?

This relaxation is being provided for the benefit of users during the initial stabilisation period.

Q29. Will post-closure actions be restricted later?

Yes. Once the system is stabilised, necessary restrictions will be introduced and post-closure actions will be suitably curtailed.

Q30. Can transporter details be updated after closure?

Yes. During the initial stabilisation period, updating transporter details will continue to be available even after the EWB has been marked as closed. Suitable restrictions may be introduced after stabilisation.

Q31. Can vehicle details be updated after closure?

Yes. Vehicle update will continue to remain available even after the EWB has been marked as closed during the initial stabilisation period. After stabilisation, such post-closure actions maybe suitably restricted.

Q32. Can validity be extended after closure?

As of now, the option to extend validity will continue to remain available even after the EW Bhas been marked as closed. This is a temporary relaxation for the initial stabilisation period.

Q33. Is closure the same as cancellation?

No. Cancellation is used where EWB was wrongly generated or movement did not take place, subject to applicable rules. Closure is used after delivery of goods has been completed.

Q34. Is closure the same as expiry of EWB?

No. Expiry is based on the validity period of the EWB, whereas closure is a user action to record completion of delivery.

5. IMPACT IN E-INVOICE API AND E-WAY BILL BY IRN

Q35. Is there any impact of voluntary closure on e-Invoice API?

The e-Invoice API facilitates only the generation of the e-Way Bill. After generation, all further operations relating to the e-Way Bill are handled exclusively through the EWB APIs. Accordingly, no impact is envisaged on the e-Invoice API.

Q36. Is there any impact of voluntary closure on Generate IRN and EWB together flow?

There is no impact.

Q37. Is there any impact of voluntary closure on e-Way Bill by IRN API?

There is no impact.

Q38. Can an EWB generated along with IRN be closed?

Yes, it can be closed.

Q39. Can an EWB generated using IRN be closed?

Yes, it can be closed.

6. BUSINESS SCENARIOS

Scenario 1: Supplier closes EWB after delivery

A supplier generates an EWB for goods dispatched from Chennai to Bengaluru. After goods are delivered, the supplier logs in and closes the EWB on the same day of delivery or on theimmediately succeeding day.

Scenario 2: Recipient closes EWB after receipt

A recipient receives goods against an EWB generated by the supplier. After receipt, the recipient closes the EWB to record completion of movement.

Scenario 3: Transporter closes EWB after delivery

A transporter carries goods from Pune to Hyderabad. After delivery, the transporter closes the EWB through portal login.

Scenario 4: Driver closes EWB using mobile number

The driver's mobile number is provided for closure. After delivery, the driver accesses the portal-based mobile number closure facility, views the active EWBs linked to the mobile number, and closes the relevant EWB.

Scenario 5: Mobile number updated during vehicle updation

An incorrect or missing mobile number is corrected during vehicle updation. The driver or authorised person may then close the EWB through the portal-based mobile number closure facility.

Scenario 6: Closure through API by ERP-integrated taxpayer

An ERP-integrated taxpayer closes EWBs through API after delivery by transmitting the EW B number, closure date and remarks.

Scenario 7: Date-wise closure by transporter

A transporter handles multiple EWBs generated on a single date. After delivery of goods, the transporter uses date-wise closure on the portal to identify and close eligible EWBs.

Scenario 8: EWB marked as closed but vehicle update attempted

During the initial stabilisation period, vehicle updation and other permitted actions will continue to remain available even after closure. After stabilisation, such post-closure actions may be suitably restricted.

Scenario 9: API user wants date-wise list of closed EWBs

At present, no separate API has been introduced for date-wise retrieval of closed EWBs. Such functionality may be considered in future after stabilisation and based on field requirements.

7. CONSOLIDATED POSITION MATRIX

Sl. No.	Issue	Current Position / Reply
1	Nature of closure facility	Voluntary
2	Who can close EWB	Supplier, recipient, transporter, driver/ authorised person
3	Closure timing	Same day of delivery or immediately succeeding day
4	Portal closure modes	EWB-wise or date-wise
5	API for closure	Available using EWB number, closure date and remarks
6	API for date-wise retrieval of closed EWBs	Not available currently; may be considered in future
7	Separate Closed status	Proposed to be introduced in due course
8	Existing status framework during initial period	Active, Cancelled and Discarded will continue
9	Post-closure actions	Allowed during initial stabilisation period
10	API mobile number capture for driver/ authorised person closure	Not available currently
11	Driver/authorised person closure through API	Not available currently; portal only
12	Remarks character limit / fixed reason code	Upto 100 characters
13	Closed By in API / Get Details response	Not available currently
14	Closure date and remarks in EWB print	Not available currently

8. ACTION REQUIRED FROM STAKEHOLDERS

Sl. No.	Stakeholder	Action Required
1	Taxpayers	Create internal process to close EWB after delivery wherever the facility is used.
2	Transporters	Familiarise operational teams with EWB-wise/date-wise closure and driver-based closure.
3	Drivers / authorised persons	Use portal-based mobile number closure where mobile number has been provided.
4	ERP/GSP/ ASP/API users	Implement closure API using EWB number, closure date and remarks.
5	All stakeholders	Note that post-closure actions are temporarily allowed during initial stabilisation period but may be restricted later.

ITAT allows tax relief on 2 flats bought as 1 home

Two residential flats on different floors of the same building can qualify as one residential house for tax deduction, rules Mumbai ITAT

Two flats on the same floor or different floors of the same building can be treated as one residential house for Income Tax deduction.

In this case, the taxpayer was allowed deduction under Section 54F for one flat and disallowed for the second, on the ground that it was a separate residential unit.

Mumbai ITAX held that the two flats were purchased as a single home for his family, with common ownership, adjoining features and common lift.

The ITAT noted that tax benefit cannot be denied merely because the property comprises two units, if the facts show it intended and used as one residential house.



கட்டிடக்கலையும் நாகரீகமும்


Er.A.G.Marimuthuraj

ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றிய நம்முடைய முன்னோர்களின் கலைஞானம் போற்றுதலுக்குரியது. அவை அனைத்தும் கடல் போன்று எல்லையற்றும், மிகுந்த ஆழமானதும் கூட அவைகளை நம்மால் முற்றிலும் அறிந்து கொள்ள முடியாத அளவிற்கு பரந்து விரிந்து காணப்படுகின்றது என்றால் அது மிகையாகாது.

மனிதனுடைய மனத்தில் இன்பம் பெருக்கெடுக்கும் உணர்ச்சிகளே அழகுக் கலைகளக்கு ஆணிவேராகும். மனித அறிவு, மனோபாவம் கற்பனை இவை மூன்றும் ஒரு புள்ளியில் சந்திக்கின்றபோது நுட்பமான ஒன்று தோன்றி விடுகிறது. அது ஒவ்வொரு இடத்திலும் அதன் தன்மைக்கு ஏற்ப விதவிதமான அழகு கலையாக பரிணாமல் பெற்றுள்ளது.

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை
தூய உருப்பளிங்கு போல்வாள்

என்கின்ற பாடல் வாயிலாக நம்மவர்களின் கலைகள் ள64 வகையானது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

இந்த 64 கலைகளும் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட செயல் முறைகளாகும். கலை என்பது தொழிலாகவும், தொழில் என்பது கலையாகவும் பயன்படும் தன்மைக்கு ஏற்ப மாறி நிற்பதும் உண்டு. எடுத்துக்காட்டாக கட்டிடக் கலையின் ஒட்டு மொத்த அழகு வடிவம் தாஜ்மகால் இதிலே கட்டுவது என்கின்ற தொழிலும் அதிலே கட்டப்பட்டதுமான அழகு என்கின்ற கலையும் பின்னி விணைந்து பிரித்துப் பார்க்க இயலாதபடி அமையப் பெற்றிருப்பது சான்றாகும்.

கலை என்னும் பெயர்ச்சொல் கல் என்னும் வேர்ச்சொல்லில் இருந்து தோன்றியதாகும். மண்ணுக்குள் புதைந்துள்ள பொன்மணிகள் போன்றே கலையானது நம் ஒவ்வொருவர் மனதுக்குள்ளும் மறைந்திருக்கின்றது.

சங்க காலத்தைப் போல நிதானமான அமைதியான வாழ்க்கை முறை இந்த காலத்தில் அதுவும் இன்றைய நிலையில் எதிர்பார்க்க முடியாதது. ஏன் என்றால் மனித வாழ்க்கை சூழல் அந்த அளவிற்கு இய்நிதரத்தனமாக படு வேகமாகச் சுழன்று கொண்டு இருக்கையிலே எங்கே போய் அழகுக் கலையை அனுபவிப்பது என்பவர்களே அனேகம்.

என்றாலும் உண்மை நிலை என்ன தெரியுமா உகில் ஒவ்வொரு நபரும் ஏதோ ஓர் விகிதாச்சாரத்தில் கலையை அழகை ரசித்து அனுபவித்து ஆக்கிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். இல்லை என்றால் அத்தனை பேரின் வாழ்வும் வெறிச்சோடி களையிழந்து காணாமல் போய்விடும்.

மனித மனம் என்பது இயற்கையில் இருக்கும் எல்லையற்ற, அழகுகளைப் பார்த்து அனுபவிப்பதுடன் நிறைவு கொள்வதில்லை. புலன் உணர்ச்சிகளைத் தூண்டக் கூடிய ஒலி, வண்ணங்களை வகைப்படுத்தி இசைப்படுத்தி அழகை படைக்க முயன்று கொண்டே இருக்கிறது. இந்த முயற்சியில் ஈடுபடும் திறனுடையவர்கள் கலைஞர்கள் என்றழைக்கப்படுகின்றனர். இங்கே எல்லா மனிதர்களம் கலைஞர்களாக ஆவதில்லை. என்றாலும் பலர் ரசிக்கக் கூடியவர்களாகவும் சிலர் கலை நுகர்ச்சி சிறிய அளவிலே உள்ளவர்களாகவும் இருக்கின்றார்களே தவிர முற்றும் அழிந்த நிலையிலே யாரும் இருப்பதில்லை.

அழகியலானது சிந்தனை செயலாகும். அது நடைமுறைச் செயல்பாடல்ல. நம்முடைய அன்றாட பிரச்சனைகளில் இருந்து நம்மை மீட்டெடுத்து வருவது அனைத்துமே அழகுக் கலையே ஆகும். அழகுக் கலைகள் ஐந்து வகைப்படும் அவை

1. கட்டிடக்கலை 2. சிற்பக்கலை 3. ஓவியக்கலை 4. இசைக்கலை 5. காவியக்கலை

இதிலே கட்டிடக்கலை என்பது பயன்கலையைச் சார்ந்தது. பயன்கலைகள் என்பது அழகோடு நடப்பியர் வாழ்க்கைக்கு உபயோகமுள்ள பொருள்களைத் தருகின்றன. எடுத்துக்காட்டாக கட்டிடக்கலையை எடுத்து கொண்டோமேயானால் அது அழகான தோற்றத்தால் உபயோகப் பயனையும் தருகிறது. ஆனால் நுண்கலைகளோ அழகுணர்ச்சியை மட்டுமே அளிப்பனவாக அமைந்துள்ளன. இவை அனைத்தும் மனிதனின் புலனுணர்ச்சிகளுக்குத் தகுந்தபடி வகுக்கப்பட்டிருக்கின்றன.

பெரும்பாலும் அழகுக் கலைகள் அந்தந்த நாட்டின் இயற்கை அமைப்பு தட்பவெப்பநிலை, மனோபாவம் சமயக் கொள்கை முதலியவற்றிற்குத் தகுந்தபடியே வெவ்வேறு விதமாக உருவடைந்திருக்கின்றன.

பல்வேறு சிறப்புக்களை உள்ளடக்கிய கலையை நம் முன்னோர்கள் வழி வழீயாக போற்றி காத்து வந்துள்ளனர். அது போன்று நாமும் கலைகளை பயின்று பாதுகாத்து வரவேண்டியது நமது மிக முக்கியமான பொறுப்பாகும்.

கட்டிக்கலை

காலத்தின் தொன்மைக்கு சான்றாக நிற்கும் கட்டிடக்கலை பல்வேறு சிறப்பம்சங்களை உள்ளடக்கியது ஆகும். கற்காலம் முதல் தற்காலம் வரையிலான நாகரிகத்தின் அளவுகோலாக அடையாளமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. கட்டிடக்கலை என்றால் அது மிகையாகாது. சான்றாக உலக அதிசயங்கள் அத்தனையும் கட்டிடக்கலை சார்ந்ததாகவே உள்ளது.

மனித வாழ்வுக்கு அடிப்படையானதாக கருதப்படுவது உண்ணும் உணவு, இருக்கும் இடம், உடுத்தும் உடை என்பனவாகும். இதிலே அவன் முதலில் உணவை மைய்யமாகக்கியே தனது வாழ்க்கை முறையை அமைந்திருத்தான் அதன் பின்னரே பறவைகளும், விலங்குகளும் பாதுகாப்பு கருதி தன்க்கென ஓரிடத்தை உருவாக்கிக் கொள்வதைக் கண்டு தானும் அது போன்று பாதுகாப்புடன் இருக்க வேண்டும் என்ற எண்ணியதின் விளைவே கட்டிடக்கலை தோற்றத்திற்கான வித்தாவது.

கட்டு மற்றும் இடம் என்கின்ற இரு சொல்லமைப்பு கட்டப்பெற்ற இடம் என்ற பொரளில் அமைந்துள்ளது. அதாவது ஒரு வெற்றிடத்தில் குறித்த அளவுக்கு உட்பட்டு கட்டப்படும் கலையே கட்டிடக் கலையானது.

உயரம், அகலம், உறுதி பகைவரால் அழிக்க இயலாத அமைப்பு. ஆகிய நான்கும் அமைந்திருப்பதே கட்டிடத்திற்கரிய இலக்கணமாகும். கட்டிடக்கலையானது சமுதாயத்தின் உள்ள பிறகலைகளும், தொழில்களும் நடைபெற இடமளிப்பதாகவும் உள்ளது. எனவே கட்டிடக்கலையானது மனித வாழ்க்கை நடைபெற அவ்வாழ்க்கைக்குத் தேவையான பிற தொழில்களும் மேன்மையடைய அடிப்படையாக அமைந்துள்ளது. இனி கட்டிடக்கலையுடன் தொடர்புடைய சிற்பக்கலை குறித்து சுருக்கமாகப் பார்ப்போம்.

சிற்ப நூல் கூறும் காலங்களும் கட்டுமானங்களும்

பழைய காலம் என்பது கி.பி.600க்கும் முற்பட்டது. இந்தக் காலத்தில் மரத்தாலும், செங்கலாலும் கட்டுமானங்கள் உருவாக்கப்பட்டன.

கி.பி.600 முதல் 900 வரை உள்ள காலம் பல்லவர்களால் இந்த காலத்தில் கருங்கல்லால் மட்டுமே கட்டுமானப்பணிகள் நடந்துள்ளது.

கி.பி.900 முதல் 1300 வரை உள்ள காலம் சோழர் காலம். இந்தக் காலத்தில் குறிப்பாக சிவன், அம்மன், கோயில் உருவாக்கப்பட்டன

கி.பி.1300 முரல் 1500 வரை உள்ள காலம் பாண்டியர்கள் காலம்

கி.பி.1500 முதல 1700 வரை உள்ள காலம் விஜயநகர அரசர்கள் காலம்

பாண்டியர் கால கட்டுமானங்கள் பெரும்பாலும் பிரம்மாண்டமாகத் தோற்றுவிக்கப்பட்டன. 13ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சிதம்பரம் கிழக்கு கோபுரம் திருவானைக்காவலில் உள்ள சுந்தரபாண்டியன் கோபுரம் போன்றவை இன்றும் பாண்டியர்கால கட்டுமானங்களுக்கு சான்றாகத் திகழ்கின்றன.

விஜய நகர அரசர்கள் கால கட்டுமானங்கள கல்யாண மண்டபங்கள் ஆயிரங்கால் மண்டபங்கள் அம்மனுக்கு தனி கருவறை நான்க கோபுர வாயில் அமைப்பு போன்ற தனித்தன்மை படைத்தவையாகவும் மிகவும் அழகுணர்ச்சியுடன் பல அலங்கார வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டன.

அதன் பின் வந்த நாயக்கர்கால கட்டுமானங்களின் சான்றாக இருப்பது மதுரை மீனாட்சி கோயில், சிதம்பரம், திருவண்ணாமலை, திருவல்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் போன்றவையாகும்.

இப்படி தென்னிந்திய திராவிடக் கட்டிடக்கலையின் கட்டுமானங்களின் காலங்களில் மாறுதல் இருந்தாலும் அந்த காலத்தில் கட்டப்பட்ட கட்டுமானத்தில் பெரிய மாற்றம் ஏதும் இல்லை. சிறு சிறு மாற்றங்கள் மட்டுமே ஏற்பட்டதே தவிர பெரிய மாறுதல்கள் ஏதும் நிகழ்ந்து விடவில்லை என்பதே உண்மை.

தென்னிந்திய திராவிடக் கட்டிடக்கலையானது சேர, சோழ பாண்டிய பல்லவ வியு நாயக்கர் கால ஆட்சியுடன் பெரும்பாலும் முடிந்து விட்டது என்றே நினைக்கத் தோன்றுகிறது. அதன் பிறக பெரிய அளவிலே தென்னிந்திய திராவிடக் கட்டிடக்கலை வளர்ச்சியை நோக்கி செல்லவில்லை என்பே ஆயர்வளர்களின் கருத்தாக இருக்கின்றது.

ஒவ்வொரு நாட்டு கட்டிடக்கலையும் ஒரு சிறப்பு தன்மையுடன் விளங்குகிறது என்பதற்கு சான்றாக

1. கிரேக்க கட்டிடங்கள் தூய்மைக்கு உதாரணமானதாகும்.
2. உரோமனியர்களின் கட்டிடங்கள் அறிவியல் வளர்ச்சிக்கு சான்றாகும்.
3. பிரெஞ்சுக்காரர்களின் கட்டிடங்கள் மறுமலர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகும்.
4. இந்தியர்களின் கட்டிடங்கள் ஆன்மீகத்திற்கு சாட்சியாகும்.

- முழுவதும் மரத்தினாலோ, செங்கலினாலோ அல்லது கருங்கல்லினாலோ கட்டப்பட்ட கோயில்களுக்குச் சுத்தக் கட்டிடம் என்று பெயர்.
- இரண்டு பொருள்களைக் கலந்து அமைக்கப்பட்ட கட்டிடம் மிஸ்ர கட்டிடம்.
- இரண்டுக்கும் மேல்பட்ட பொருள்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கட்டிடம் சங்கீரணம் என பெயர் சூட்டப்பட்டன

கோயில்களின் கட்டமைப்பு

1. மரக்கோயில்கள்

அன்றைக்கு மரத்தினால் கோயில்கள் கட்டப்பட்டதால் அவை விரைவில் பழுதடையாது இருக்க பாதுகாப்பாக செம்புத் தகடுகளையும், பொற்தகடுகளையும் கூரையாக வேய்ந்தார்கள்.

2. செங்கல் கட்டுமான கோயில்கள்

மரத்திற்கு பின் செங்கல் சுண்ணாம்பு கொண்டு கட்டத் துவங்கினார்கள். என்றாலும் அவை பெரும்பாலும் 200 அல்லது 300 ஆணட் ுகளுக்கு மேல் நிலைபெற்று இருக்கவில்லை. கி.பி.600 முற்பட்ட காலத்தில் செங்கல் கட்டுமானம் தோன்றியது.

3. குகைக்கோயில்கள்

குகைக் கோயிலை அமைக்கும் புதிய முறையை ஏற்படுத்தி கட்டிடக்கலையில் ஒரு புரட்சியை உண்டாக்கியவன் மகேந்திரவர்மன் ஆவான. இக்குகைக்கோயில்கள் சென்னை காஞ்சிபுரம் திருச்சி என பால இடங்களில் சான்றாக இன்றும் உள்ளன. இவை கி.பி.7 ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டிருக்கலாம் என்கிறார்கள்.

4. கற்றளிகள் (கற்கோயில்கள்)

கி.பி.7 ஆம் நூற்றாண்டில் இறுதியில் அரசாண்ட மன்ன் இரண்டாம் நரசிம்மவர்மன் காலத்தில் கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்படும் கற்கோயில்கள் உருவாயின. சான்றாக மகாபலிபுரம், காஞ்சிபுரம் கயிலாயநாதன் போன்ற கோயில்களாகும். ஏறத்தாழ 1200 ஆண்டும் கடந்தும் இன்றும் இக்கோயில்கள் நிலைத்திருப்பது பிரமிப்பூட்டுவனவாகவும் இருக்கிறது.

சங்க கால கட்டிடக்கலை நூல்கள் சில

நிலம் எவ்வாறு இருக்க வேண்டும் அதை எந்த முறையில் பரிசோதிப்பது மற்றும் கட்டிட அமைப்பில்

உள்ள பலவித நுணுக்கங்கள் எவை, அளவு முறைகள் என்ன என்ன முதலிய செய்திகளை பற்றிய குறிப்புகள் உள்ளடக்கிய முறைகளுக்கு வாஸ்து சாத்திரம் என்று பெயர் இட்டிருந்தனர்.

அந்த வகை சார்ந்த சாத்திர நூல் இருவகைப்படும். ஒன்று மயன் என்ற ஒப்பற்ற தச்சனாகும். அதாவது கம்பர் தனது இராம காவியத்திலே குறிப்பிடும் இராவணனின் மனைவி மண்டோதரியின் தந்தையாக மயன் என்ற மாபெரும் தமிழன்தான். மகாபாரத்தில் பஞ்சபாண்டவர்களுக்கு அரசுக்கு மாறிகை கட்டித் தந்ததாகவும் கூறப்படுகின்றது. அப்பேர்ப்பட்ட மயன் எழுதிய நூல்கள்தான் மயமதம் என்றானது மற்றது விஸ்வகர்மா என்ற தெய்வத்தச்சனால் இயற்றப்பட்டதாகும்.

மயமதம் தென்நாட்டில் சிறப்பாகத் தமிழ்நாட்டில் பின்பற்றப்படுவதாகும். விஸ்வகர்மா எழுதிய விஸ்வகாமியம் இந்தியாவின் வடபகுதி மக்களால் பெரிதும் பின்பற்றப்படுவதாகும். இந்த இரு நூல்களைக் கொண்டு பல்வேறுபட்ட நூல்கள் பின்னாளிலே தோன்றலாயின. சான்றாக புகழ்பெற்ற போகிமன்னன்தானே எழுதிய சமராங்கன் சூத்திரதாரம் என்னும் வாஸ்து நூலாகும். அதே போல் கேரள சேத்திலே தந்திர கமுச்சயம் என்ற நூலும் எடுத்துக்காட்டாக அமைகின்றன.

கட்டிடக்கலை வல்லுநர்கள் (மனை வகுப்பார்)

அன்றைக்கு ஒரு தொழில் செய்பவனே தான் செய்யும் தொழிலுக்கு உரிமை உடையவனாகவும் இருந்தான். அந்தக்காலத்தில் தொழில் செய்வதில் கடும் உழைப்பு பொறுப்புணர்ச்சி, சுதந்திரமனப்பான்மை ஆர்வம் முதலிய தேவைகளை உள்ளடக்கியும் இருந்தமையால் தொழில்கள் நேர்மையுடன் நேர்த்தியாகவும் செய்யப்பட்டன.

சங்ககால கட்ட அமைப்பு மூன்று பெரும் பிரிவுகளாக கொள்ளலாம்.

1. கோயில் 2. அரண்மனை 3. பிறகட்டுமானங்கள்

தொடக்க காலத்தில் கோயில்கள் மரத்தினாலே கட்டப்பட்டது. இன்றும் அதுபோல் கேரளம் போன்ற பகுதிகளில் கட்டப்படுகின்றது. பின்னர் களிமண் சுவர் அமைத்து மரத்தால் அதன் மேல் கூரை வேயப்பட்டது. அதன் பின்னர் சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமாக மாறின. இறுதியாக கருங்கல்லால் முழுவதும் கட்டப்பட்டன. இது போன்றே அரண்மனையும், பிற கட்டுமானங்களும் படிப்படியாக வளர்ச்சி நிலை எய்தின.

தமிழர்களின் கட்டிடக் கலை சிறப்பை முழுமையாக அறிவதற்கு சான்றாக இருப்பது சிந்து சமவெளி நாகரிகத்தில் அமைந்துள்ள மொகஞ்சதரோ, கரப்பா என்கின்ற இருநகரங்களின் அமைப்பே போதும்.

தெருக்களின் அமைப்பு

பெரும்பாலும் தென் கிழக்கு வட கிழக்கு பருவகாற்றை கருத்தில் கொண்டே நல்ல காற்றோட்டத்தை மையமாக்கி தெருக்கள் அமைக்கப்பட்டுள்ளன. காற்று தெருவின் அகன்ற தெருக்களில் வீசும்போது குறுக்கே உள்ள சிறிய தெருக்களிலும் புகுந்த எல்லா மக்களுக்கும் தற்காற்றை நுகர வசதியாக அமைக்கப்பட்டது. தெருக்களின் இருபுறமும் நடைபாதை அமைப்பு இரு சாலைகள் சந்திக்கும் முனையினை வளைவு வடிவத்தில் அமைத்தல் போனற் நுட்பத்தையும் அங்கு காண முடிகின்றது.

கால்வாய் அமைப்பு

ஒவ்வொரு வீட்டில் இருந்தும் வடிகால்வாய் வழியே கழிநீருடன் வரும் குப்பை கூளங்கள் தாழிகளில் வந்து விழும்படி அமைத்து அந்தத் தாழிகளில் அடிப்பாகத்தில் இருக்கும் சிறு துளை வழியே கழிவு நீர் தொட்டியில் நிரம்பி தெருக்கால்வாய்களில் கலக்கும்படி அமைத்திருந்தனர். மேலும் சுவருக்குள்ளேயே கரிவு நீர் குழாய்களை தெரியாத வண்ணம் அமைத்திருந்தனர். இன்றைக்கு இருக்கும் பாதாளச் சாக்கடை போன்றே அன்றைக்கும் மூடிய நிலை கழிவு நீர் கால்வாய்கள் அமைக்கப்பட்டு உள்ளன. பெரும்பாலான வீடுகளில் மலம் கலப்பதற்கு உரிய இடம் கட்டப்பட்டது. மேலுரம் சில மாளிகைகளில் மேன் மாடங்களிலேயே இத்தகைய வசதிகள் அமையப்பெற்றிருந்தன.

சிறிய இல்லம் என்பது 4.5 அறைகள் கொண்டதாக இருக்கிறது. உயரமான மட்டுப் பகதிகளிலேயே பல்வேறு நகரங்களை தீர்மானித்து இருந்தனர். மேலும் அடுக்குமாடி குடியிருப்புகளும் காணப்படுகின்றன. சுமார் ஏழு மாடி வரையிலான கட்டுமானங்கள் உள்ளன.

கட்டிடச் சுவர்கள் ஓரளவில் அமையப்பெறவில்லை. பெரிதம் சிறுதுமாக உள்ளன. பெரிய முற்றமுடைய இல்லங்கள் பல குடும்பங்கள் வாழ்ந்த வீடுகள், செல்வர்தம் மாட மாளிகைகள், அரண்மனைகள் போன்று தனித்தனியாக சமையல் அறை நீராடும் அறை என காணப்படுகிறது.

ஒரு நகரம் நன்முறையில் அமைந்துள்ளது எனில் அது பரந்த இடத்தில் அமைந்திருத்தல் வேண்டும். நீண்டு அகன்ற தெருக்களைப் பெற்றிருத்தல் வேண்டும். எல்லாப் பாதைகளும் விலக்கின்றித் துயு மையாக இருக்க வேண்டும். கழிவுநீரைச் செவ்வனே கொண்டு செல்லுவும் ஒழுங்கான கால்வாய்கள் அமைந்திருத்தல் வேண்டும். பொது மக்கள் பயன்படும் வண்ணம் பொது கட்டுமான இடங்கள் இருத்தல் வேண்டம். இப்படிப்பட்ட எல்லா வகை வசதிகளும் நன்கு அமையப்பட்ட நாகரிக வாழ்வை வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள் என்பதில் பெருமிதம் கொள்வோம்.

நகரமைப்புக்கு ஒரு சான்று

சேர, சோழ, பாண்டிய கொங்கு என நான்கு மண்டலங்களை நம்மவர்கள் உருவாக்கி ஒவ்வொன்றுக்கும் நான் எல்லைகளை வெகு அழகாகவும் பொருத்தமாகவும் வியப்படையும் வகையிலும் மிக நேர்த்தியாக பிரிக்கப்பட்டு உள்ள விதம் தமிழரின் புவியியல் வானியல் அறிவியல் திறனை பறைசாற்றுகின்றது. ஆறுகளும் மலைகளும் என்றும் நிரந்தரமாக இருக்கும் என்பதால் அவைகளை மையப்படுத்தி அமைத்த விதம் கவனிக்கத்தக்கதாகும்.

இது மட்டுமல்ல வான் முட்டும் கோபுரங்கள் நெடிதுர்ந்த கோயில் ரதங்கள், தரையில் அமைந்த கோட்டை கொத்தளங்கள் மலையில் அமைந்த துருவங்கள்

ஆற்றைக் குறுக்காட்டும் கல்லணைகள் அதிலிருந்து புறப்படும் கால்வாய்கள் கடல்போன்ற ஏரிகள் வளம் கொழிக்கும் வயல்கள் என சொல்லிக் கொண்டே போகலாம். அந்த அளவிற்கு எண்ணிலடங்காத அவர்களின் பொறியியல் திறனுக்கு அளவே கிடையாது.

இந்திய கட்டிடக்கலை முறையில் தமிழ்நாட்டுக் கட்டிடக்கலை தனிச் சிறப்பு வாய்ந்ததாக விளங்குகிறது. தென் இந்திய கட்டிடக் கலை முறையைத் திராவிடக் கட்டிடக்கலை முறை என்பார்கள். தென்னிந்திய கட்டிடக்கலை பல்லவர் காலத்தில் குகைக் கோயில்களாக அரும்பி, சோழர்காலத்தில் விண்ணை முட்டும் மாபெரும் கோயில்களாக மலந்து பல்லவர் காலத்தில் நுட்பமுடனும் எளிமையுடனும் அடக்கமாக காட்சி அளித்து முன்னேற்றம் கண்டது.

இப்போர்ப்பட்ட ஒரு வடிமைப்புக்கலை இன்றைய தமிழக சமுகத்தினராலே மறக்கப்பட்டு சிலரால் மறைக்கப்பட்டு வருகின்றது. அந்த மனித வளத்திற்கான மரபு முறைகளை அற்புதமான அந்த அழகுக் கலைகளை போற்றி பாதுகாக்க வேண்டியது நமது ஒவ்வொருவரின் தலையாயக் கடமையாகும்.

இறுதியாக ஒரு கட்டிடம் கட்டுவதற்கு என்ன என்ன தேவை என்றால்

1. கலையுணர்வுத் தன்மை மிகுந்திருத்தல் வேண்டும்.
2. பொறியியல் திறன் மேம்பட்டு இருக்க வேண்டும்
3.மெய்யறிவு எனும் இயற்கையறிவு பெற்றிருத்தல் வேண்டும்

மேற்கண்ட முக்குணமும் ஒருங்கே அமையப் பெற்றவரே காலத்தைக் கடந்து நிற்கும் கட்டுமானத்தைத் தோற்றுவிக்க வல்லவர் ஆவார். அப்பேற்பட்டவர்கள் தோற்றுவித்த கட்டுமானங்களே இன்றைய அளவில் உலக அதிசயங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டவைகளாகத் திகழ்கின்றன என்பதே உண்மையாகும்.

கட்டுமானத்தில் அளவின் ரகசியம்

உலகில் உள்ள அனைத்துப் பொருள்களும் வட்டம் சதுரம் ஈரளவு செவ்வகம் மூன்று பொது வடிவங்கள் உள்ளடக்கி வருவதனால் என்னவோ இந்த உலகில் தோன்றிய முக்கிய மூன்று மதங்களும் அந்த மூன்று வடிவத்தை தனது மத அடையாளமாக போற்றி புகழ்ந்து கொள்கின்றது.

மேற்கண்ட மூவளவு வடிவங்களிலும் முதன்மையானது அழகானதும் எந்த வடிவம் மிக அழகாகத் தோன்றி நம் கவனத்தை கொள்ளை கொள்கிறது என்றால் அது எந்தவித சந்தேகத்திற்கும் இடமின்றி தெளிவாகச் சொல்லிவிடலாம் செவ்வகம் என்று.

செவ்வகம் என்றால் அது எந்த விதிக்கு உட்பட்டு இருக்க வேண்டும் என்றால் அதாவது அதன் அகலத்தை விட அதன் நீளம் ஒன்றரை மடங்கு அதிகமாக அமையப்பெற்ற செவ்வக வடிவமே அழகாகவும், அற்புதமாகவும் தோன்றக் கூடியது.

உதாரணத்திற்கு நாம் மிக மிக அழகாக இருப்பதாகக் கூறும் டிவி திரை மற்றும் புகைப்படம் முதலானவை செவ்வக வடிவமாகும்.

எப்போது இத்தகைய அழகியலை மனிதன் கண்டுபிடித்து பயன்படுத்த தொடங்கினான் என்று பார்த்தால் அவன் நாகரிகமாக வாழத் தொடங்கிய சுமார் 5000 ஆண்டுக்கு ஆன்பிருந்தே என்று சொல்லத் தோன்றுகின்றது.

அழகின் விகிதாச்சாரம் (Golden Ratio)

Gold Ratio = Length/Width = 1/618

அழகின் விகிதாச்சாரம் = நீளம் / அகலம் = 1.618

நம் முன்னர் குறிப்பிட்ட விதியே இது. அதாவது ஒரு பொருளின் நீள, அகலத்தை வகுத்து வரும் ஈவு அளவு = 1.618 என்கிற எண்ணாக இருக்கும் பட்சத்தில் அது அழகான தோற்றத்தை அடைகின்றனது என்பதாகும். அதாவது நம் கண்ணின் இயல்பான அழகுப்பார்வையை, கணித இயல நமக்கு அழகின் விகிதாச்சாரவிதி என கண்டுபிடித்துச் சொல்லுகிறது.

இத்தகைய விதிமுறை பார்ப்பதற்கு அழகான தோற்றங்களை உடைய மிகத் தொன்மையான அதிசயங்களில் இருந்து ஆரம்பிக்கின்றது என்றால் அது மிகையாகாது. எடுத்துக்காட்டாக 2500 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட பார்த்தினோன் கட்டிடம் எகிப்திய பிரமிடுகள் போன்றவை இதற்கு சாட்சியாக இன்றும் நிற்கின்றன. பெரும்பாலும் பிரமிடுகளின் அடிப்பாகம் ஒரு சதுர வடிவமானது. ஒவ்வொரு பக்கமும் 230 மீட்டர் நீளமுடையது. பிரமிடின் உயரம் 146 மீட்டர் உடையதாக உள்ளது இந்த அளவை சோதித்துப் பார்ப்போம்.

146 மீட்டர் அகலம், 230 மீட்டர் நீளம் அழகு நிலை = நீளம் / அகலம் =1.618 230/1461,57.5343=1.6

ஏன் செவ்வகம் மட்டும் அழகாக இருக்கின்றது என்றால் அதன் இரகசியம் நம் பார்வையில் உள்ளது. நமது கண் இப்பூவுலகை ஒரு செவ்வகமாகத்தான் பார்க்கிறதார். அது இடமிருந்து வலமாக பார்வை வரியோட்டம் செய்யும் போது குறிப்பிட்ட அளவுக்கு மேல் அதிகரிப்பதில்லையாம். இவ்விதி முறையை கருத்தில் கொண்டு ஒரு முடிவுக்கு வருவதனால் நம் கண் பார்வை செவ்வகமாகவே இருக்கிறது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அது இயல்பாகவே நமது அழகுணர்வை நிர்ணயிக்கும் காரணியாகவும் அமைந்துவிட்டது என்று கூறுகின்றனர்.

அதனால்தான் என்னவோ உலகில் மிக, மிக அழகாக இருப்பதாக நாம் நினைக்கும் கட்டிடங்கள், ஓவியங்கள், சிலைகள் என அனைத்திலும் ஒர பொன்விதி கையாளப்பட்டுள்ளதை பல ஆய்வாளர்கள் கண்டறிந்து தெளிவுபடத்தி உள்ளனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

அழகின் ரகசியத்தை அறிந்து கொண்டு நாமெல்லாம் இனி அதை நம் வாழ்வில் பயன்படுத்தி ரசித்து மகிழ்வோமாக.

New Patron Members



Mr. G.R. Venkatesh
M/s. Sri Bhagya Homes
Managing Director
A1 Block, New No.7, Old No.79
5th Street, Anna Nagar, Shanthi Colony
Chennai - 600 040
Mob: 97911 51122



Mr. J. Nirmal
M/s. Sun Power Services
Managing Executive
No.53, Plot No.4, 4th Street, Phase I Extension
Annai Velankanni Nagar, Madhanandapuram
Porur, Chennai - 600 116
Mob:91766 97027



Ms. A. Sangeetha
M/s. Insta Civil Technical Services
Constrction,Interiors & Engg.Consultancy
No.25, Venugopal Nagar, First Main Road
Thirumullaivoyal, Chennai 600 062
Mob : 73056 27308



Mr. T. Selvam
M/s. Selvamani Constructions
No.9/2, Pillai Vettu Street
Chinna Salem - 606 201, Kallakurichi(D.T)
Mob: 97518 62626



Mr. K. Rajamalayappan
M/s. Nala Construction
Flat No.7, Kothari Avenue, Irrandam Kattlai
Thandalam, Chennai - 600 128
Mob: 9094007719

விபத்துக்களுக்கு விடை கொடுக்கும் தொப்பூர் கணவாய்

மரணப் பாதையாக அறியப்பட்ட தொப்பூர் கணவாய், புதிய உயர்மட்ட மேம்பாலத்தின் மூலம் அதிநவீன பாதுகாப்பு பாதையாக மாறப்போகிறது.

கால் நூற்றாண்டுக்கு முன்பு... வான் உயர்ந்த மரங்கள், அடர்ந்த புதர்கள், சாலையின் இருபுறமும் பசுமையான தாவரங்கள் பகலில் கூட சூரிய ஒளி தரையில் படாத அளவுக்கு குளுமையும், பனிமூட்டமும் காணப்பட்ட இடம்தான் தொப்பூர் கணவாய்..

24மணி நேரமும் ஓய்வு இல்லா ஹாரன் சத்தம் நிறைந்த இருவழி பாதையாகவே தொப்பூர் கணவாய் பகுதி இருந்துள்ளது. சாலையில் பயணிக்கும் வாகனங்களின் எண்ணிக்கையும் குறைவு, அப்படியே சாலையில் பயணிக்கும் லாரிகளும், பஸ்களும் ஒவ்வொரு நாளும் ஆபத்தான பயணத்தையே மேற்கொண்டன. அந்த பகுதியை கடந்து செல்லும் போது வாகனங்கள் ஹாரன் எழுப்பியபடியே மெதுவாக கடந்து செல்லும். சாலையின் இருபுறமும் குரங்கு கூட்டமும், வனவிலங்குகளின் நடமாட்டமும் மிக சாதாரணமாகவே இருந்துள்ளன என்று வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன.

நீளமான தேசிய நெடுஞ்சாலை

அன்றைக்கு ஒரு நாளைக்கு சராசரியாக 10 ஆயிரம் வாகனங்கள் மட்டுமே பயணித்ததாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. பொது மக்களிடையே மோட்டார் சைக்கிள், கார்களின் பயன்பாடும் குறைவாகவே இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் தர்மபுரி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தைப் போக்கும் நேரத்தில் 1906ம் ஆண்டு ஜனவரி மாதம் 16ந்தேதி தொப்பூர் கணவாய் அமைந்துள்ள தர்மபுரி பிராந்தியத்தை இணைக்கும் வகையில் முதல் ரெயில் பாதை திறக்கப்பட்டது. மெட்ராஸ் ரெயில்வே நிறுவனத்தால் அமைக்கப்பட்ட இந்த குறுகிய ரெயில் பாதை மொரப்பூர் முதல் தர்மபுரி வரை சுமார் 29 கிலோ மீட்டர் தூரத்திற்கு முதன்முதலில் போடப்பட்டது.

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலான தங்கநாற்காலி சாலைத்திட்டம் கொண்டு வரப்பட்ட



பிறகுதான், இந்த தொப்பூர் கணவாய் பகுதியானது 24 மணி நேரமும் வாகனங்கள் பயணிக்கும் தூங்காத சாலையாக மாறி போனது. இந்த நாற்கர சாலையானது கடந்த 2005ம் ஆண்டு பணிகள் தொடங்கப்பட்டு 2009ம் ஆண்டு முழுமையாக பயன்பாட்டுக்கு வந்தன. இந்த மலைப்பாதையானது தர்மபுரி, சேலம் மாவட்டங்களின் எல்லையில் கிழக்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் அமைந்துள்ள ஒரு வரலாற்று சிறப்புமிக்க மிக முக்கியமான இடம். தர்மபுரி மாவட்டத்தின் தெற்கு எல்லையாகவும், சேலம் மாவட்டத்தின் வடக்கு எல்லையாகவும் இந்த கணவாய் உள்ளது. தர்மபுரியில் இருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்திலும், சேலத்தில் இருந்து சுமார் 35 கிலோ மீட்டர் தூரத்திலும் இந்த கணவாய் உள்ளது. காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலான இந்தியாவின் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை இந்த கணவாய் வழியாக செல்கிறது. மேட்டூர்ஈரோட்டை இணைக்கும் மாநில நெடுஞ்சாலை தொப்பூர் கணவாயில் மேட்டூர் பிரிவு என்ற இடத்தில்தான் இணைகிறது.

ஆபத்தான சாலை

தொப்பூர் கணவாய் இந்தியாவின் மிக ஆபத்தான சாலை பகுதிகளில் ஒன்றாக தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. தர்மபுரியில் இருந்து சேலம் செல்லும் பாதையில் 9 சதவீதம் செங்குத்தான சரிவு உள்ளது. எதிர்பாரா குறுகிய வளைவுகள் அடுத்தடுத்து அமைந்துள்ளன. தற்போது தினமும் 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாகனங்கள் இந்த சாலையில் பயணிக்கின்றன. இதில் 75 சதவீதத்துக்கும் அதிகமான கனரக லாரிகள் செல்வதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. சாலை சரிவாக இருப்பதால் கனரக வாகனங்கள் வளைவுகளில் பிரேக் பிடிக்காமல் கட்டுப்பாட்டை இழந்து முன்னால் செல்லும் சிறிய வாகனங்கள் மீது அடுத்தடுத்து மோதி தொடர் விபத்துக்களை ஏற்படுத்துகின்றன. கடந்த 2018ம் ஆண்டு முதல் 2026ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மட்டும் இப்பகுதியில் 630 கோர விபத்துகள் நடந்துள்ளன. இதில் சம்பவ இடத்திலேயே 80க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 2100க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர்.

உயர்மட்ட பாலம்

இப்படி அடிக்கடி விபத்துக்கள் நடப்பதால் இடைக்கால விபத்து தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் ஒரு பகுதியாக ஆபத்தான 300 மீட்டர் பகுதியை ரெட் ஜோன் என அறிவித்து டிரைவர்களை எச்சரிக்கும் வகையில் தெர்மோபளாஸ்ட்டிக் சிவப்பு வண்ண பூச்சுகள் சாலையில் பூசப்பட்டுள்ளன. 35க்கும் மேற்பட்ட இடங்களில் ஒளிரும் எல்.இ.டி விளக்குகள், ரம்பிள் ஸ்டிரிப்ஸ், ஒலி எச்சரிக்கை அமைப்புகள் நிறுவப்பட்டு வாகனங்களின் வேகம் 30 கீலோ மீட்டராக குறைக்கப்பட்டுள்ளது. வளைவுகளை சீரமைக்க தற்காலிகமாக சாலைப்பகுதி 5.5 மீட்டர் அளவிற்கு அகலப்படுத்தப்பட்டது. இப்படியாக தற்காலிக தீர்வு ஒரு பக்கம் இருந்தாலும் இந்த பகுதியில் உயர்மட்ட மேம்பாலம் அமைப்பதே விபத்துக்களை தடுக்க நிரந்தர தீர்வாக அமையும். இதனை கருத்தில் கொண்டு உயர்மட்ட பாலம் கட்ட மத்திய அரசு ஸிஉ.905 கோடி நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் நடந்து வருகின்றன

83 பிரமாண்ட தூண்கள்

இந்த பாலம் அமைப்பதன் மூலம் 9 சதவீதமாக இருக்கும் ஆபத்தான சரிவு இந்தத் திட்டத்தின் மூலம் 3 சதவீதம் முதல் 5 சதவீதமாக குறைக்கப்படும். ஒட்டுமொத்தமாக சாலையானது 6.6 கிலோ மீட்டர் தூரம் அமைக்கப்படுகிறது. இதில் 3.68 கி.மீ தூரத்திற்கு பிரமாண்ட உயர்மட்ட பாலம் கட்டப்பட்டு வருகிறது. இந்த உயர்மட்ட பாலம் 83 பிரமாண்ட தூண்களை கொண்டு அமைக்கப்பட்டு வருகிறது.

மலைப்பகுதியின் ஆழத்திற்கு ஏற்ப இந்த தூண்களின் உயரம் 8 மீட்டர் முதல் 50 மீட்டர் வரை (சுமார் 15 மாடி கட்டிடம்) பிரமாண்டமாக அமைக்கப்படுகிறது. தற்போது இந்த திட்டத்தின் கட்டுமான பணிகள் 41.53 சதவீதம் நிறைவடைந்துள்ளன. போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

இந்த பாலம் பணியானது தற்போத 6 வழிப்பாதையாக நடந்து வருகின்றன. இந்த பணிகள் தற்போது 40 சதவீதம் நிறைவடைந்துள்ளன. இன்னும் 2 ஆண்டுகளில் அதாவது 2028ம் ஆண்டுக்குள் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டு பணிகள் முழு வீச்சில் நடந்து வருகின்றன.

6 வழிச்சாலை எப்படி ?

தொப்பூர் கணவாயில் 6 வழிச்சாலை என்பது எப்படி ? என்ற கேள்வி அனைவருக்கும் எழும், பொதுவாகவே தர்மபுரியில் இருந்து சேலம் நோக்கி வரும் போதுதான் விபத்துக்கள் அதிகம் நடக்கின்றன. எனவே தர்மபுரியில் இருந்து சேலம் நோக்கி வரும் வாகனங்களுக்கு மட்டும்தான் மேம்பாலம்



அமைக்கப்படுகிறது. அதுவும் 3 வழிப்பாதையாக பணிகள் நடந்து வருகின்றன. சேலத்தில் இருந்து தர்மபுரி நோக்கி செல்லும் வாகனங்கள் ஏற்கனவே உள்ள சாலை வழியாக பயணிக்க வேண்டும். இந்த தரைவழி சாலையானது இருவழிச்சாலையாக இருப்பது தற்போது 3 வழிசாலையாக மாற்றப்படுகிறது. இந்த சாலையானது சுமார் 20 அடி அகலத்தில் அமைக்கப்படுகிறது. எனவேதான் இது 6 வழிச்சாலை என்று அழைக்கப்படுகிறது.

தொப்பூர் பெயர் வந்தது எப்படி ?

கிழக்கு தொடர்ச்சி மலையின் அடர்ந்த காடாகவும், ஏராளமான மரங்கள் நிறைந்த தோப்புகளாகவும், இருந்ததாலும்தான் தோப்பு + உர் தோப்பூர் என்று உருவானதாகவும், பின்னர் மருவி தொப்பூர் ஆனதாகவும் வரலாற்று தகவல்கள் கூறுகின்றன. அதே நேரத்தில் புவியியல் ரீதியாக செங்குத்தான மலைகளுக்கு நடுவே குழிந்த வடிவில் அமைந்துள்ள நிலப்பரப்பை அல்லது பள்ளத்தை குறிக்கும் தொப்பை அல்லது தொப்புள் என்ற தூய தமிழ் சொல்லின் மருவாக இப்பகுதிக்கு தொப்பூர் என்று பெயர் நிலைத்து இங்கு ஓடும் காட்டாற்றிற்கும் தொப்பையாறு என்ற பெயர் வந்திருக்கலாம் என்றும் வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

கட்டுமான பணியில் சவால்களும் .... யுத்தங்களும்.....

தொப்பூர் கணவாய் சாலையில் அமைக்கப்படும் உயர்மட்ட மேம்பால பணியானது இந்திய கட்டுமான துறையின் சாதனையாக சொல்லப்படுகிறது. அதற்கு கீழ்கண்டவை முக்கிய காரணிகளாக அமைகின்றன. அதனை விவரம் இதோ :

- தற்போதைய சாலையானது 9 சதவீதம் சரிவு என்ற செங்குத்தான சரிவாக உள்ளது. இதனால் தர்மபுரியில் இருந்து வரும் கனரக வாகனங்கள் பிரேக் பிடிப்பதில் சிரமம் ஏற்பட்டு பிரேக் சூடாகி கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகின்றன. புதிய மேம்பாலத்தின் மூலம் இந்த ஆபத்தான சரிவு 3 சதவீதமாக குறைக்கப்படுகிறது அதாவது வாகனங்கள் மலையில் ஏறுவது அல்லது இறங்குவது போன்ற உணர்வே இல்லாமல் மிக சமமான சாலையில் செல்வது போன்ற தொழில்நுட்ப வடிவமைப்பை என்ஜினியர்கள் செய்துள்ளனர்.
- இந்த கணவாய் பகுதி மிக ஆழமான பள்ளத்தாக்குகளையும், பாறைகள் நிறைந்த மலைச்சரிவுகளையும் கொண்டது. பாலத்தை தாங்குவதற்காக மொத்தம் 83 பிரமாண்ட தூண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. நிலப்பரப்பின் பள்ளங்களுக்கு ஏற்ப இந்த தூண்களின் உயரம் (26 அடி முதல் 16.4 அடி வரை) 8 மீட்டர் முதல் 50 மீட்டர் வரை (சுமார் 15 மாடி கட்டிடம் உயரம்) மிக பிரமாண்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தூணுக்கும் இடையே 40 முதல் 45 மீட்டர் வரை (130 முதல் 148 அடி வரை) சராசரியாக 144 அடி இடைவெளி கொண்டு இந்த தூண்கள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டமானது மிகப் பெரிய சிவில் என்ஜினியரிங் சாதனையாகும்.
- பழைய கணவாய் பாதையில் திடீர் திருப்பங்களும் குருட்டு வளைவுகளும்

இருந்ததால் வாகனங்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இந்த வளைவுகளுக்கு இணையாக பாலம் கட்டாமல் வளைவுகளையே முற்றிலும் தவிர்த்து மலைகளுக்கு இடையே நேர்க்கோட்டில் பறக்கும் பாலம் போல இந்த உயர்மட்டச் சாலை அமைக்கப்படுகிறது.

- தினமும் சுமார் 60 ஆயிரம் வாகனங்கள் கடந்து செல்லும் இந்த மிக போக்குவரத்து நிறைந்த சாலையில் ஒரு நாள் கூட போக்குவரத்து நிறுத்தாமல் இவ்வளவு பெரிய பாலத்தை கட்டுவது மிகப் பெரிய சவாலாகும். அத்துடன் இச்சாலை காப்புக்காடுகள் வழியாக செல்வதால் சுற்றுச்சூழலுக்கோ அல்லது மரங்களுக்கோ பெரிய அளவில் பாதிப்பு ஏற்படாத வண்ணம் மிகக் குறுகிய இடத்தை பயன்படுத்தி அதிநவீன எந்திரங்கள் மூலம் தூண்கள் அமைக்கப்படுகின்றன.
- 4 வழி அல்லது 6 வழி சாலை அமைக்க இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் பொதுவாக ஒரு கிலோ மீட்டருக்கு ஸிஉ.30 முதல் ஸிஉ.50 கோடி வரை மட்டுமே செலவிடும். ஆனால் இந்த 6.6 கி.மீ நீள தொப்பூர் திட்டத்திற்கு ஒரு கிலோ மீட்டருக்கு ஸிஉ.137.32 கோடி என்ற மிகப் பெரிய அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- ப்ரீகாஸ்ட் தொழில்நுட்பம் என்பது பாலத்தின் தூண்களுக்கு மேல் கைப்படும் சிமெண்ட் பாளங்கள் கட்டுமான பகுதியில் செய்யப்படுவதில்லை. அவை நகரத்திற்கு வெளியே உள்ள ஒரு யார்டில் முன்கூட்டியே செய்யப்பட்டு, லாரிகள் வாயிலாக நள்ளிரவில் கொண்டு வரப்பட்டு கிரேன் மூலம் சில மணி நேரங்களிலேயே பாலத்தில் பொருத்தப்பட்டு விடும். இதனால் சாலையில் சிமெண்ட் கலக்கும் வேலை இருக்காது.
- அதிக ஆபத்துள்ள பணிகள் மற்றும் ராட்சத கிரேன்கள் பயன்படுத்தும் வேலைகள் அனைத்தும் இரவு 11 மணி முதல் காலை 5 மணி வரை மட்டுமே அதிக அளவில் மேற்கொள்ளப்படும்.

பஞ்சத்தில் உருவான கணவாய் சாலை

தொப்பூர் கணவாய் மலைப்பாதை சாலை முதன்முதலில் ஒரு முறையான சாலையாக சீரமைக்கப்பட்டதே 1876ம் ஆண்டு முதல் 1878ம் ஆண்டு வரை ஏற்பட்ட பஞ்சத்தின் போதுதான். இந்த பஞ்சம் தமிழ் ஆண்டான தாது வருடத்தில் வந்ததால் தாது வருட பஞ்சம் என்று அழைக்கப்பட்டது. இந்த பஞ்சம் தென்னிந்தியா முழுவதும் பரவி இருந்தது. பஞ்சத்திற்கு முன்பு வரை தொப்பூர் கணவாய் பகுதி என்பது அடர்ந்த காடாகவும், கரடுமுரமான மாட்டுவண்டி பாதையாகவும் மட்டுமே இருந்தது. சென்னை மாகாணத்தில் பிற பகுதிகளில் இருந்தும், மேட்டூர், சேலம் போன்ற இடங்களில் இருந்தும் தர்மபுரி, மைசூரு மாகாணத்திற்கு பஞ்ச நிவாரண தானியங்களை அவசரமாக கொண்டு சேர்க்க ஒரு தகுதியான சாலை தேவைப்பட்டது. அதற்காகவே, இந்த பஞ்சம் நடந்த காலப்பகுதியில் தொப்பூர் கணவாய் மலைப்பாதை அகலப்படுத்தப்பட்டு முக்கியப் போக்குவரத்து வழித்தடமாக மாற்றப்பட்டது. அப்போது ஆங்கிலேய அரசு இந்தியாவில் இருந்து டன் கணக்கில் உணவு தானியங்களை இங்கிலாந்துக்கு அனுப்பியது. மேலும் உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு பதிலாக பருத்தி, அவுரி உள்ளிட்ட பணப்பயிர்களை சாகுபடி செய்ய மக்களை வற்புறுத்தியது. மேலும் மக்களுக்கு இலவசமாக உணவு வழங்குவதை தவிர்த்து வேலைக்கு உணவு என்ற திட்டத்தை கொண்டு வந்தது. இத்திட்டத்தின்கீழ் பசியால் வாடிய தர்மபுரி பகுதி மக்கள் மிக குறைந்த கூலி, கஞ்சி போன்ற உணவிற்காக தொப்பூர் கணவாய் மலையை குடைந்து சாலை அமைக்கும் கடுமையான பணிகளில் தொழிலாளர்களாக ஈடுபடுத்தப்பட்டனர். பஞ்சத்தின் போது தர்மபுரியில் இருந்து பிழைப்பு தேடி சேலம் நோக்கி சென்ற ஆயிரங்கணக்கான மக்கள் உணவு இல்லாமல் தொப்பூர் கணவாய் வனப்பகுதியிலேயே தங்கி மடிந்தனர். அப்போது ஆங்கிலேய அரசு தர்மபுரி சேலம் எல்லையான தொப்பூர் பகுதியில் தற்காலிக பஞ்ச நிவாரண கஞ்சி தொட்டிகள் அமைத்து இருந்தது. இப்படி பஞ்சம் ஏற்பட்ட காலக்கட்டத்தில் உணவு பொருட்களை கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்டதே இந்த தொப்பூர் கணவாய் சாலை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் தகவல்கள் அனைத்தும் ஹென்றி லெபாலு என்பவர் தர்மபுரி, கிருஷ்ணகிரி சேலம் மாவட்டங்களில் 150 ஆண்டுகளுக்கு முந்தைய பழமையான வரலாற்றையும் தாது வருடப் பஞ்சத்தின் பாதிப்புகளையும் ஆவனப்படுத்திய ஆங்கிலேய வரலாற்று பதிவாளர் ஆவார்.

SAKTHI
— WINDOWS & DOORS —

ENGINEERED FOR STRENGTH, CRAFTED FOR ELEGANCE

Premium Quality Systems
Built to Last. Designed to Impress.

DURABLE & STRONG | WEATHER RESISTANT | SOUND INSULATION | ENERGY EFFICIENT



WE ARE SPECIALIST IN THE FIELD OF

- **UPVC** WINDOWS & DOORS
- **SLIMLINE & SYNCHRONISED** ALUMINIUM SYSTEM
- **SYSTEM ALUMINIUM** WINDOWS & DOORS
- **ABS** DOORS

THE PERFECT SOLUTION FOR EVERY SPACE


UPVC WINDOWS & DOORS


SLIMLINE & SYNCHRONISED ALUMINIUM SYSTEM


SYSTEM ALUMINIUM WINDOWS & DOORS


ABS DOORS

SAKTHI
— WINDOWS & DOORS —
QUALITY | STRENGTH | STYLE

No.2/1A, Valliyammal Nagar, Kanniyamman Kovil Main Road, Vanagaram Post, Chennai, Tamil Nadu - 600095

info@sakthiwindows.com

+91 9884 30 7739

www.sakthiwindows.com

Builders' Association of India
Southern Centre
ESTD: 1941

SOUTHERN BUILDERS MAGAZINE

— THE VOICE OF THE BUILDING COMMUNITY



REACH 10,000+ DECISION MAKERS

ADVERTISEMENT TARIFF

Reach Builders • Architects • Consultants • Developers • Industry Leaders

ADVERTISEMENT POSITION	QUARTERLY (₹)	HALF YEARLY (₹)	ANNUAL (₹)
Multicolour A4 Size – Back Cover Page	N/A	N/A	4,00,000
Multicolour A4 Size – Back Cover (Inner Page)	N/A	N/A	2,50,000
Multicolour A4 Size – Front Cover (Inner Page)	N/A	N/A	3,00,000
Multicolour A4 Size – Inner Page (Full Page)	60,000	1,00,000	1,80,000
Multicolour A4 Size – Inner Page (Half Page)	30,000	55,000	1,00,000
Multicolour A4 Size – Inner Page (Quarter Page)	17,500	30,000	50,000

★ GST 5% EXTRA

PREMIUM PRINT QUALITY | WIDE & TARGETED READERSHIP | ENHANCE BRAND VISIBILITY | BUILD TRUST & CREDIBILITY

ADVERTISE. CONNECT. GROW.
Partner with Southern Builders Magazine and put your brand where it matters!

8754598668
baisouthern1950@gmail.com

BE SEEN.
BE REMEMBERED.
BE SOUTHERN BUILDERS.

Classified Ads

ELCONBUILDS

DESIGN | INTERIORS | ENGINEERING |
APPROVALS | CONSTRUCTION MANAGEMENT

Building
Dreams
Engineering
Success

GET EXPERT GUIDANCE

ARUN KUMAR P

B.E. Civil, MSc Structural Engineering (UK)
M.I.E., Chartered Engineer
Regd. Engineer Grade- I (GCC, CMDA)
Regd. Structural Engineer Grade- I (GCC, CMDA)

+91 95000 56668
arun@elconbuilds.com

3/9, Sridharan Street Ayyavoo Colony,
Aminjikarai, Chennai - 600029

G.R. ENGINEERING

grsenthil

Senthil Kumar veerapillai

- GATE AND GRILL WORKS
- SS RAILING WORKS
- ALL KINDS OF WELDING WORKS
- ALL KINDS OF ROLLING SHUTTERS WORKS
- ROOFING SHED WORK

QUALITY WORK | TIMELY DELIVERY | COMPETITIVE PRICE

97102 14858
88255 70787

grengineering1979@gmail.com

No. 71A, Singarampillai Street,
Mogappair Road, Mannurpet,
Chennai - 600 050.

Your Satisfaction is Our Success

SHREE ADITHYA

